# மத நல்லிணக்க அவசியம் பற்றி சந்திரிகா – ரணில் முக்கிய பேச்சு

சிறுபான்மை மக்களின் வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் எதிர்நோக்கவேண்டியேற்படும் அபாயநிலை குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்றுக் காலை முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

அரசியலுக்கு அப்பால் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தினால் மாத்திரமே நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதன்போது தெரிவித்தார்.

நேற்றுக்காலை ஒரு மணிநேரம் இடம்பெற்ற

6

## மத நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில், நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து எந்தவிதமான பேச்சுகளிலும் தாம் ஈடுபடவில்லை என இருவரும் தெரிவித்தனர்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுக் காலை 10 மணிமுதல் 11 மணிவரை இச் சந்திப்பு இடம்பெற்றது. இதில் ஐ.தே.க சார்பில் அதன் தலைமைத்துவசபை உறுப்பினர்களான தீஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க, மங்கள சமரவீர, ருவண் விஜேவர்தன ஆகியோர் பங்கேற்றனர்.

தென் ஆசிய பிராந்திய வலய கொள்கை மற்றும் ஆய்வு நிறுவகம் என்ற பிராந்திய அமைப்பு ஒன்றின் முக்கிய பதவி வகிக்கும் சந்திரிகா குமாரதுங்க, இலங்கையில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமய வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து அவதானம் செலுத்தி, சமயங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது குறித்த கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றார்.

இதனடிப்படையில் நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவர் ரணிலை சந்தித்த சந்திரிகா, இலங்கையில் சமயாங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது குறித்து, ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட எதிர்க்கட்சிக் குழுவினருடன் பேச்சு நடத்தினார்.

இதுகுறித்து சந்திரிகா குமாரதுங்க கருத்து வெளியிடுகையில்,

சமயாங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது குறித்து எமது அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எமது அமைப்பில் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயத் தலைவர்களை உள்ளடங்குகின்றனர்.

சமயாங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாவிட்டால், எதிர்நோக்கவேண்டிய அபாய நிலைகுறித்தும், சிறுபான்மை மக்களின் வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் குறித்தும், அதைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தற்போது பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் இன்று (நேற்று) எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சு நடத்தினோம் - என்றார்.

இந்தச் சந்திப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் சமயாங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தமது முழு ஆதரவையும் வழங்கத் தயாராக உள்ளது. சிறுபான்மை மக்களின் சமய வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து நாம் அவதானம் செலுத்தினோம். அத்துடன், மாநாயக்க தேரர்களும் இன்று பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அது குறித்தும் நாம் கலந்துரையாடினோம் - என்றார். (12)